49

சிறப்பிதழ்!

மார்ச் '85

# சுட்டி

60 காசு • மாத இதழ்




FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

# நடமாடும் அஞ்சலகம்

இந்தியாவின் முக்கிய நகரங்களில் மாலை இரவு நேரங்களில் பொது மக்களின் அஞ்சல் தேவைகளுக்குப் பேருதவி புரிபவை நடமாடும் அஞ்சல் நிலையங்கள். பண விடை, பார்சல், இன்சூரன்ஸ் தவிர வேறு எல்லா அஞ்சல் நிலைய செயல்பாடுகளும் இதில் உண்டு. நேரத்தவறாமையை இன்றும் பேணி வரும் விதிவிலக்காக இவை சரியாக வந்து செல்கின்றன. வேலையிலிருந்து திரும்பிய பின்னரே ஓய்வு கிடைக்கும் நபர்களுக்கு, அவசரமாக கடிதம் எழுத வேண்டியவர்களுக்கு இது வரப்பிரசாதம் தான். அவசரத்திற்கு மட்டுமே இவ்வசதியைப் பயன்படுத்துமாறு அஞ்சல்துறை அறிவிக்கிறது. இங்கு பெருமளவில் மொத்தமாக அஞ்சல் செய்வதோ, அஞ்சல் பொருட்களை வாங்குவதோ ஊக்குவிக்கப்படுவதில்லை.

இந்த அஞ்சல் நிலையங்களின் சிறப்பு அம்சமே, மற்ற அஞ்சல் நிலையங்கள் மாதிரி, வேறு இடத்திற்கு கடிதங்களை எடுத்துச் சென்று, பிரித்து அனுப்பி (சார்டிங்) தாமதப்படுத்துவதில்லை. இந்த அஞ்சல் வண்டிக்குள்ளேயே எல்லாக் கடிதங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு (சார்டிங் அலுவலகத்திற்கே போகாமல்) நேரடியாக ரயிலுக்கும், விமானத்திற்கும் அனுப்பப்படுகின்றன. இந்த அஞ்சல் வண்டியின் ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஒரு தனி வாகனம் வந்து அஞ்சல் பைகளை எடுத்துச் சென்று விடுகிறது. எனவே கடிதங்களை விரைவாகப் போய் சேர்ப்பதில் நடமாடும் அஞ்சல் நிலையத்திற்கு இணையேயில்லை.

விரைவில் இந்த மாதிரி வண்டிக்குள்ளேயே பிரித்து அனுப்பும் வசதியையும் நிறுத்திவிட விருக்கிறார்களாம். இந்த அஞ்சல் நிலையத்தின் உயிர் நாடியே இந்த பிரிப்பக விரைவு தான். இதில் கைவைத்த பின்பு இந்த வாகனமே உயிரற்றுப் போய்விடாதா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

இதில் பணியாற்றும் ஊழியர்களின் — சிறப்பாக நான் நேரில் நீண்ட காலம் கவனித்த சென்னை இரண்டாவது தடத்தில் இயங்கும் (மேகதூதம்) ஊழியர்களின் பணி பயன்படுத்துவோரை மிகவும் கவர்ந்துள்ளது. அஞ்சல் நிலையங்கள் பலவற்றில் நாம் சந்திக்கும் ஊழியர்களிடமுள்ள வறட்டு சட்டம் பேசும் எந்திரத்தனம், சிடுமூஞ்சித்தனம் இங்கு இல்லை. வண்டி கிளம்பும்போது ஓடிவந்து அஞ்சலிட வருவோரிடம் கூட, எரிந்து விழாமல் கொஞ்சம் நிறுத்தி மனிதாபிமானத்தோடு நடந்து கொள்கிறார்கள். அஞ்சல் வில்லை ஒட்டித் தருகிறார்கள். மக்கள் தொடர்பைப் புன்சிரிப்போடு பேணுகிறார்கள்.

ராஜாஜி காலத்திலிருந்து இயங்கி வரும் இந்த நடமாடும் வண்டிகளும் அஞ்சல் துறையின் படிப்படியான சீரழிவின் எதிரொலியைப் பிரதிபலிக்காமல் இல்லை. முன்பெல்லாம் கொட்டும் மழையோ, கடும் பனியோ குறித்த நேரத்தில் 365 நாட்களும் இந்த வண்டி குறித்த நேரத்தில் வந்து நிற்கும். அவசரத்திற்கு ஆப்த நண்பனாகக் இதனை மக்கள் பார்த்தார்கள். பின்பு ஞாயிறு இவ்வண்டி நிறுத்தப்பட்டது. சமீபத்தில் அஞ்சல் விடுமுறை நாட்களிலும் இது ஓய்வெடுத்துக் கொண்டு விடுகிறது. இதே ரீதியில் அடுத்த வசதி வெட்டு என்னவாக இருக்கும்? அஞ்சல் கட்டணம் ஏற ஏற மக்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டாமா? இந்த நடமாடும் அஞ்சல் நிலையங்களையே முற்றிலுமாக நிறுத்திவிடும் [illegible] பரிசீலனையில் இருக்கிறதாம். இந்த வசதியை நிறுத்தி விடக் கூடாதென்றும், மீண்டும் 365 நாட்களும் அது சுறுசுறுப்பாக முழு அளவில் சிறப்பாக வசதியுடன் இயங்க ஆவன செய்ய வேண்டுமென்றும் இதைப் பயன்படுத்துவோர் பெருமளவில் அஞ்சல்துறை தலைமை இயக்குநர், அண்ணா சாலை, சென்னை -- 600 002 அவர்களுக்குக் கடிதம் மூலம் உரத்த குரல் எழுப்பினால் இழந்த வசதியை மீட்க வழி பிறக்கக்கூடும்.

— பரிதி

FREE E- BOOKS , www.thamizham.net.,



# அஞ்சல் துறையின் அபாரச் சுறுசுறுப்பு!



சென்னையில் நண்பர் ஒருவர், தமது உறவினர்க்கு பதிவு தபாலில் பார்சல் ஒன்றை அமெரிக்காவுக்கு 26.10.84ல் அனுப்பியிருக்கிறார். சுமார் ஒன்னரை மாத காலமாக அக்நாலேஜ்மென்ட்டும் வரவில்லை. பார்சலும் போய் சேர வில்லை.

15.12.84ல் ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார். அதற்கு பதிலாக 21.12.84ல் ஒரு ஃபாரம் அனுப்பி, அதை பூர்த்தி செய்து அனுப்பும்படி தபால் துறை கேட்டிருந்தது. அதை உடனே பூர்த்தி செய்து அனுப்பி விட்டார்.

அதற்கு, 03.01.85ல் 'தங்கள் புகார் பரிசீலனை செய்யப் படுகிறது, விரைவில் தங்களுக்கு பதில் தருகிறோம்' என்று பதில் வந்தது. ஆனால் இது வரை யாதொரு தகவலும் இல்லை.

மற்றொருவர் 07.12.84 அன்று காரைக்குடிக்கு ஒரு கடிதம் அனுப்பினார் அவர் இருமுறை சென்னைக்கும் காரைக்குடிக்கும் சென்று வந்த பின்னர் 31.12.84ல் அவர் போட்ட கடிதம் காரைக்குடியில் அவர் கைக்கே கிடைத்தது.

தாமதத்திற்கான காரணங்கள்:

● நிரந்தரமாக செல்லும் தபால் காரர் தொடர் விடு முறையில் போகும் போது, அவருக்குப் பதிலாய் போகும் புதியவர்களால் — முகவரி சரியாய் கண்டு பிடிக்க முடியாததால், பல கடிதங்கள் ரிடர்ன் லெட்டர் ஆபிஸிற்கு அனுப்பப்படுகின்றன.

ரிடர்ன் லெட்டர் ஆபிஸிலிருந்து திருப்பியனுப்பப்பட்டு அனுப்பியவர் கைக்கு கிடைக்க குறைந்தது ஒரு வாரமாகிறது.

FREE E-BOOKS , www.thamizham.net.,

● கடிதங்களை பிரிக்கும் முறையில் நவீன முறைகள் புகுத்தப்படாததால் காலதாமதம் என்பது தொடர்கதையாகிறது.

● சமீபக் காலத்தில் அஞ்சல் துறைக்கும் இரயில்வேக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாகவும் தாமதத்திற்கு வாய்ப்பிருக்கிறது.

● இரயில்வே தபால் தந்தி இவைகளில் தாமதம் ஏற்படக் காரண ஆய்வு அட்டவணை :-

| FROM | TO | இரயில்வே | த த த்துறை |
|---|---|---|---|
| நகரம் | நகரம் | 70% | 30% |
| நகரம் | கிராமம் | 50% | 50% |
| கிராமம் | நகரம் | 40% | 60% |
| கிராமம் | கிராமம் | 30% | 70% |

● பதிவுத் தபாலுடன் அனுப்பப்படும் அக்காலேஜ்மென்ட் பலருக்கு வருவதே இல்லை. சிலருக்கு வந்தால் அதிசயம்.

● சர்வீஸ் கமிஷன், மற்றும் பல்கலைக் கழகம் போன்றவற்றிற்கு ஒரே சமயத்தில் பல லட்சணக்கான பதிவுத் தபால்கள் வருவதால் உடனே அவைகளைச் சரி பார்த்து சம்பந்தப்பட்ட துறைகள் அக்காலேஜ்மென்ட்டைத் திருப்பித் தராததால் அவை வருவதற்கு தாமதமாகிறது அல்லது வராமலிருக்க வாய்ப்பிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

● கடிதம் எழுதுபவர்கள் தெளிவான முகவரி எழுதாததாலும், நல்ல மையைப் பயன் படுத்தாததாலும் முகவரி புரியாமல் கால தாமதமாகிறது அல்லது டெட் லெட்டர் செக்ஷனுக்கு அனுப்பப்படுகிறது.

● தபால் துறையில் வழங்கப்படும் மணியார்டர் ஃபாரம் மிக தெளிவான, தரங்குறைவான தாளில் தயாராவதால் நல்ல மையை பயன்படுத்தி எழுதினால் கூட தெளிவாக தெரிவது சிரமம். தரங் கெட்ட மையால் எழுதுவதால் முற்றிலும் எழுத்துக்கள் புரியாமல் போய் விடுகிறது.

எனவே —

உரிய நேரத்தில் கடிதம் சேர்ந்து அதன் பயனை அனுப்புவோரும் பெறுவோரும் பூரணமாய் அடைவதற்கு—

இனியாகிலும் இக்குறைபாடுகளைக் களைய முற்படுவார்களா?

— எஸ். கே. சிவா


# ஆஸ்துமாதானே!

இனி கவலையே வேண்டாம்! ஆஸ்துமாவும், ஈஸ்னோபிலியாவும் வியக்கத்தக்க வகையில் சுகமடைய, இலவச ஆலோசனை பெற, கடிதம் எழுதுங்கள்.

முகவரி: ஞானோதய வைத்தியர்,
டாக்டர். சி.கே. மாணிக்கவாசகம்,
செலந்தம்பள்ளி போஸ்ட், திருப்பத்தூர் தாலுகா
வ.ஆ. — 635 653

குறிப்பு: சென்னை, பெங்களூர், கோவை, திருப்பத்தூர் முகாம்களில், இதர பிணிகள் இரவும் நேரிலும் ஆலோசனை பெறலாம்.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# திரையுலகப் பிரமுகர்கள்:

# இயக்குநர் கே. பாலசந்தர்

## அரசியல் படங்கள் 8

நகரத்தில் வாழும் நடுத்தர மக்களின் மேலோட்டமான பிரச்சினைகளை ஆரம்பத்திலும், ஆழமானப் பிரச்சினை களைக் காலப் போக்கிலும் சித்தரிக்கத் துவங்கிய பாலசந்தர், அரங்கேற்றத்தின் போது சமூக விச்சுடன் பரிணமித்தார். தனி நபர்களின் மனப் போராட்டங்களையும், பல்வேறு உணர்ச்சிப் பிரளயங்களையும் கலாபூர்வமாக சித்தரித்து வந்த பாலசந்தர் அப்போராட்டங்களுக்குக் காரணமாக சமுதாயப் போக்கினை யும் அப்போது அலசத் துவங்கினார்.

உழைப்பின் மீது நம்பிக்கையோ — எளிமையான வாழ்க்கையின் மீது விருப்பமோ இல்லாத ஒரு முன்னாள் நடுத்தர வர்க்கக் குடும்பத்துப் பெண் விபசாரத்தைத் தழுவி குடும்பத்தின் பொருளாதார அந்தஸ்தை உயர்த்தியதின் மூலம் சமுதாயத்தின் ஏலாத் தன்மையை அம்பலப்படுத்தியிருந்தார். இத்தகைய உத்திரவாதமற்ற வாழ்க்கை முறைகளுக்கும், எத்தகைய ஒழுக்கக் கேடுகளையும் அங்கீகரிக்கும் இன்றைய அமைப்புக்கும் காரணம் என்ன என்பதற்குரிய விடை அரங் கேற்றத்தில் இல்லை. வர்க்கங்களாய் பிரிந்துள்ள இந்த நாட்டை அரசியல் ரீதியான போராட்டங்கள் மூலமே மாற்ற முடியும் என்கிற முடிவுக்கு வந்து சேர பாலசந்தருக்குப் பல ஆண்டுகள் பிடித்தது.

பாலசந்தரின் அரசியல் படங்கள் இருவகையானவை. ஒரு பிரச்சினையை அரசியல் ரீதியாகச் சொல்வது என்பது ஒரு வகை. அதே நேரத்தில் அரசியலையே ஒரு பிரச்சினையாக சித்தரிப்பது இன்னொரு வகை.

சமூக ரீதியான விஷயங்களை அரசியல் ரீதியாக விவரித்த படம் புன்னகை. எத்தனை சோதனைகளுக்கும் தளராமல் உண்மையே பேசி அதற்காக உயிரையும் அர்ப்பணித்த

FREE E- BOOKS , www.thamizham.net.,

நாயகனின் புன்னகை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இந்தியத் தத்துவமான அஹிம்சையைக் கேள்விக்குரிய தாக்கியது. இன்றைய சமூக அமைப்புக்கு இத்தகைய அஹிம்சை வழி தேவை தானா என்ற கேள்வியை முன்வைத்தது.

மரோ சரித்திராவையும் இந்த வகையில் சேர்க்கலாம். முழுக்க முழுக்க இது காதல் படமே என்றாலும் இன்றைய இந்திய சமூக அமைப்பை இது யதார்த்தமாக எடுத்துக் காட்டியது.

பொதுவாக காதல் தோல்விக்குக் காரணம் பொருளாதார ஏற்ற தாழ்வும், ஜாதி மத வேறுபாடுகளுமே. ஆனால் மரோ சரித்திராவின் காதலர்கள் இரண்டு பேருமே மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. படித்த குடும்பத்தினரே. ஆனால் கமலின் கலாச்சாரம் தமிழ்க் கலாச்சாரம். காதல் தோல்விக்கு அடிப்படை காரணமே இந்த வித்தியாசம் தான்.

ஆக தெலுங்கு கலாச்சாரம், கேரளப் பண்பாடு, வங்க நாகரீகம் என்று தான் இந்த நாடு பிரிந்திருக்கிறதே தவிர இந்தியக் கலாச்சாரம், இந்திய பண்பாடு என்று தனியாக இல்லை. எனவே தேசிய ஒருமைப்பாடு என்பது உடைமையாளர் களின் கண் துடைப்போ என்கிற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

'தண்ணீர் தண்ணீர்' ஒரு சமுதாயப் பிரச்சினை. நாடகத்தில் இதை அரசியல் ரீதியாக சித்தரித்திருந்தார் கோமல் சாமிநாதன். குடி தண்ணீர் கூட இன்றைய ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்காததற்குக் காரணம் இந்த சமுதாய அமைப்பும், மோசமான ஆட்சி முறையுமே என்றும் இதை மக்கள் போராட்டத்தின் மூலம் தான் முறியடிக்க முடியும் என்றும் கோமல் வலியுறுத்தியிருந்தார். ஆனால் பாலசந்தரோ குடி தண்ணீரே கிடைக்காததற்குக் காரணம் அரசியல் கட்சிகளே என்ற முடிவைத் திணித்து விட்டார்.

இந்த சிந்தனையின் முழு வெளிப்பாடு தான் அச்சமில்லை, அச்சமில்லை! கட்சியையோ — ஒட்டுமொத்தமான அரசியல் இயக்கத்தையோ கையாளாமல் தனிப்பட்ட அரசியல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வியாபாரியைக் கதாபாத்திரமாக்கி அவனைக் கொன்று அதன் மூலம் திருப்தியடைந்திருக்கிறார் பாலசந்தர்.

தவறு செய்யும் அரசியல்வாதியைக் கொன்று விடலாம் என்பதும் ஒரு வகை அரசியல் பார்வை தான். கடத்தல் காரர்கள், பதுக்கல்காரர்கள் போலவே கெட்ட அரசியல் வாதிகளையும் இந்த சமுதாயம் தான் உருவாக்குகிறது. சமுதாய மாற்றத்திற்கான புரட்சிகர அரசியல் போராட்டம் வெற்றி பெறுகிறபோது வியாபார அரசியல் உட்பட அனைத்துக்கும் விடிவு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் அதன் எதிர்மறையான அம்சங்களை மட்டும் பூதாகரமாக்கி கட்சிகளை நிராகரிக்கக் கோருகிறார் கே.பி.

கட்சி அரசியலோ — அரசியல் அமைப்போ வேண்டாம் என்பது ஏகாபத்திய முகாமின் புதிய கோஷமாகும். இக்குரல் மதவாத — இனவாத — ஜாதீய ஆதிக்கத்திற்குப் பட்டுக் கம்பளம் விரிப்பதாகும். இந்த கோஷம் தான் இன்று ஈரானிலும், பாகிஸ்தானிலும், பங்களாதேசிலும், சிலி போன்ற அமெரிக்க நாடுகளிலும் அரங்கேறியிருக்கிறது. இமயத்தை தாண்டியும் இது எட்டிப் பார்க்கிறது.

இன்றைய பூர்ஷ்வா அரசியல் இயக்கம் சாக்கடைத்தனமாக இருக்கிறது என்பது உண்மை. வியாபாரிகளும் சுயமிகளும் இதிலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் இதை மாற்றியமைக்க முயலும் சக்திகளையே ஒழித்துக் கட்டக் கிளம்பினால், இன்றைய குறைந்த பட்ச உரிமைக்கும் அபாயம் அல்லவா ஏற்படும்?

கட்சியற்ற — அரசியலற்ற சமுதாய முறையும் ஆட்சி அமைப்பும் ராணுவ அதிகாரத்தின் துப்பாக்கி முனையில் தான் சாத்தியம். இத்தகைய போக்கில் சென்றால் தண்ணீர் தண்ணீர், அச்சமில்லை, அச்சமில்லை போன்ற படங்களைப் படைக்கும் குறைந்த பட்ச உரிமையைக் கூட பாலசந்தரே இழந்துவிட நேரும்.

—— டி.எஸ். ரவீந்திரதாஸ்

(அடுத்த இதழில் முடியும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

# முதலுதவி - மாரடைப்பு



இந்தக் காலத்தில் நல்ல திடகாத்திர மாக இருப்பவர்களும் திடீரென்று மாரடைப்பு வந்து விழுந்து இறந்து போகிறார்கள். இந்த மாரடைப்பு பல்வேறு காரணங்களால் வருகிறது. ஆனால் அவற்றை விளக்குவது இக் கட்டுரையில் நோக்கம் அல்ல. ஆதலால் மாரடைப்பு வந்து உயிர் போன பின் ஏதாவது முதலுதவி செய்ய முடியுமா என்பதைத் தான் இங்கே விளக்கப் போகிறோம்.

ஒரு சமயம் லண்டனில் இருந்த மருத்துவர் ஒருவருக்கு ஒருயிரைக் காப்பாற்று வாய்ப்புக் கிட்டியது. மாரடைப்பால் நண்பர் ஒருவர் கீழே விழுந்து கிடக்கும் போது பிரிட்டிஷ் மெடிக்கல் ஜெனரல் என்ற மருத்துவ இதழில் அமெரிக்க நாட்டிலுள்ள ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனை அறிஞர்கள் வெளியிட்டிருந்த கட்டுரை ஒன்று நினைவுக்கு வந்தது.

அதைச் செய்து அந்த நண்பர், உயிரைக் காத்த செய்தியை உலகப் பத்திரிகைகள் எல்லாம் பாராட்டின. அந்த முதலுதவி முறையைப் பத்திரிகைகள் பலவும் பல்லாண்டுகள் தொடர்ந்து வெளியிட்டு வந்தன.

விழிப்புள்ள "கட்டி" வாசகர்களும் அம்முறையை நன்கு அறிந்து, ஆபத்துக் காலத்தில் ஆருயிர் காத்திட வேண்டும் என்று கீழே விளக்கப்படுகின்றன.

இங்கே படத்தில் உள்ளவாறு மாரடைப்பு வந்து விழுந் தவரின் முதுகு பூமியில் படுமாறு படுக்க வைக்க வேண்டும். மோவாய்க் கட்டை நன்கு மேல் நோக்கியவாறு தலையைக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

குத்திட்டு வைக்க. இருதயத்திற்கு மேலே மார்பில் வலது உள்ளங்கையை வைத்து அதன் மீது இடது உள்ளங்கையையும் வைத்து மாறி மாறி அழுத்தவும் தளர்த்தவும் செய்யுங்கள். உங்கள் முழு பலத்தையும் கொண்டு அழுத்துங்கள். ஒருவேளை மார்பெலும்பு ஒடிந்தாலும் பரவாயில்லை; அதை சரி செய்து கொள்ளலாம். அவ்வாறு அழுத்தும் போது இருதயத்தில் தேங்கிய இரத்தம் ஐயோர்டா என்னும் இரத்தக் குழலில் பாய்கிறது. மீண்டும் இருதயம் இயங்கத் தொடங்குகிறது.

ஒரு நிமிடத்திற்கு 70 முறை அழுத்தியும் தளர்த்தியும் விட வேண்டும். அது மட்டுமல்லாமல் முதலுதவி செய்ய முன் வந்தவர் மாரடைப்பு வந்தவரின் வாயில் தம் வாயை வைத்து முழு பலத்துடன் காற்றை ஊத வேண்டும். இந்த இரண்டு செய்முறைகளையும் மருத்துவர் வரும் வரை உற்சாகத்துடன் செய்து வந்தால் செத்தவர் பிழைத்தெழுந்தலாம். மாரடைப் பினால் சாவு அதிகமாக இருக்கும் இந்நாளில் மேலே கூறிய இந்த முதலுதவி முறையை கல்வி நிறுவனங்கள் திட்டமிட்டும் பரப்ப முன் வர வேண்டும். அடுத்து: முதலுதவி — தீப்புண்

— சுட்டி பாரதி

## ஒட்டகத் தபால்காரர்



ராஜஸ்தான் மாநிலத்தில், பல பாகங்களில் ஒட்டகம் மூலமாகத் தான் தபால் பட்டுவாடா நடைபெறுகிறது.

மகாராஷ்டிரத்தில் 'பெலிகான்' பறவைகளை தபால் பட்டு வாடா செய்யவும், செய்தி அறிவிக்கவும் பழக்கியிருக்கிறார்கள் மலைச் சாதியினர். குடியிருக்கும் பகுதிக்கு அவை தகவல்கள் கொண்டு போகும்; அங்கிருந்து கொண்டு வரும். அரை மணியில் இருபது கிலோ மீட்டர் தூரத்தை கடந்து விடும் இப்பறவைகள்.

■ இந்தியாவுக்கு தபால் பெட்டி 1885—ல் முதன் முதலாக வந்தது.

- எம்.கி.இளங்கோ -

FREE E- BOOKS , www.thamizham.net.,

## நாட்டு இஞ்சி மருந்துகள்

**எந்த வித காய்ச்சலுக்கும்:** பாதி சுண்டு விரல் இஞ்சியுடன், ஒரு கைப்பிடியளவு புதினாக் கீரையைச் சேர்த்து சாறெடுத்து, வடிகட்டி, தேக்கரண்டி தேனைக் குழப்பிக் கலந்து உண்க. தொடர்ந்து சிறிது வெந்நீர் பருகுக. இவ்விதம் நாளைக்கு ஆறு வேளை தயாரித்து உண்டால், பின் விளைவில்லாமல் எந்தக் காய்ச்சலையும் குணப்படுத்தலாம்.

**கர்ப்பிணிகளின் விக்கலுக்கு:** 2 தேக்கரண்டி இஞ்சிச் சாறுடன் புளியங்கொட்டை அளவு திப்பிலியும், அதே அளவு கடுக்காயும் சேர்த்து மை போல் அரைத்து உள்ளுக்குத் தருக. நிற்காத விக்கல் நிற்கும்.

**விடாத தலைவலிக்கு:** இஞ்சியைத் தட்டி வலியுள்ள இடத்தில் கனமாகப் பற்றுப் போடுக. கால்மணி நேரத்தில் 'யாருக்குத் தலைவலி?' என்று கேட்பீர்கள்.

**காச நோய்க்கு:** சுண்டு விரல் நீள இஞ்சி, அதே அளவு சிற்றரத்தை இவற்றைச் சேர்த்து அம்மியில் நசுக்கி, ஒரு டம்பளர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துக் கஷாயமாகக் காய்ச்சி இறுத்து, காலை, மாலை அரை டம்பளர் அளவு கஷாயத்துடன் சர்க்கரை சேர்த்து குடிக்க காச நோய் காணாமல் போகும்.

எந்த நோயும் வாராதிருக்க தேக பலன் ஏற்பட விலையுயர்ந்த லேகியங்களை நாடி பணத்தைச் செலவிடாதீர்! காலையில் பாக்களவு தோல் சீவிய இஞ்சித் துண்டை மென்று விழுங்க. மதியம் அதே அளவு சுக்கை விழுங்குக. மாலை அதே அளவு கடுக்காய்த் துண்டை மென்று தின்று விடுக. மூவேளையும் விழுங்கிய பின் நீர் அருந்த லாம். உணவுக்கு முன் உண்ணுதல் நலம். தொடர்ந்து 29 நாட்கள் உண்க. 3 நாள் விடுக. மறுபடி 21 நாட்கள் உண்க. 40 நாள் இவ்விதம் சாப்பிடுவோர்க்கு எந்நோயும் அணுகாது. தேகம் உறுதியாகும்.

(அடுத்து: நமது விளாம்பழ மருத்துவம்) ●●●● — சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,



பயணத்தொடர்...

## பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்

### தேர்தல் என்ற தவம்:

சுவர்கள் நாறச் சுவரொட்டிகள்! சாலைகள் நாறத் துண்டறிக்கைகள்; சாலையில் குறுக்கே குழி பறித்துக் கட்சி முழக்கங்கள்; படிப்போரும், நோயாளரும், காது அடைப்பட்டுக் கதறும்படியாக ஒலி பெருக்கி முழக்கங்கள்! சந்துக்குச் சந்து, சந்திப்பிற்குச் சந்திப்பு போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் முற்றும் இடையூறு தரும் வகையில் நள்ளிரவு வரை கூட்டம்; கும்மாளம்; ஒலி பெருக்கி அலறல்! தேர்தலுக்கென விடுமுறை — இப்படி, ஏன் இந்த ஆதிவாச இந்தியர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது என்று அறிந்தவ. அனைவரும் களங்கும் அளவிற்கு, இந்தியாவில் தேர்தல்கள் — வெறும் 'மேளாக்கள்' ஆகிவிட்டன; ஆக்கப்பட்டுவிட்டன. ஆனால், குடியாட்சித் தத்துவத்தைப் பெற்றெடுத்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தேர்தல் — ஒரு தவமாக நடத்தப்படுகிறது. மேற்கண்ட இந்திய அசிங்கங்கள் அங்கே இடம் பெறுவதில்லை! கட்சிகளின் பேட்டி, போட்டி எல்லாம் — தெருவிலோ, ஊரான் வீட்டுச் சுவரிலோ நடத்தப்படுவதில்லை. பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி — ஆகிய தொடர்புச் சாதனங்களே கட்சிகளின் வேண்டுகோள் சாதனங்கள்! கழுதை ஊர்வலம், சைக்கிள் ஊர்வலம் எனச் சாலையில் செல்லும் மக்களைச் சாகடிப்பதே இல்லை. பல நாடுகளில் சின்னம் எனப் படங்காட்டும் தேர்தல் முறைகள் இல்லை! தனித்தனி வாக்காளர், தனித்தனி வேட்பாளர் என்ற தேர்தல்முறையின் ஆதிவாசத் தத்துவம் பல இடங்களில் புதைக்கப்பட்டுவிட்டது. யு.கே. தவிர பல நாடுகளில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அமுலுக்கு வந்துவிட்டது. குருட்டு வழிபாடு, முரட்டு வழிபாடு போன்ற பூசாரி — பக்தத்தனங்களுக்கு இடமே இல்லை. எனவே பெரும் பாலும் ஒரு முறை, இருமுறைக்குப்பிறகு ஆளுங்கட்சிகள். மக்களால்

FREE E- BOOKS , www.thamizham.net.,

மாற்றப்படும்! புதுக் கட்சி பதவியில் ஏற்றப்படும். எனவே ஒரு குடும்ப ஆட்சிக்கோ, ஒரே நடிப்புக் குடுகுடுப்பை ஆட்சிக்கோ தொடர்ந்து இடம் இல்லை. ஐரோப்பாவில் மட்டுமின்றி, ஆப்பிரிக்காவில் உள்ள செனகாலில், 1978 இல் இத்தகு அமைதித் தேர்தல் நடந்ததை நேரில் இருந்து கண்டேன். அப்போ! ஆமாம்! நாம் ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாகக் கூட அல்ல — ஆதிவாசி நிலையில் தான் இன்றும் இருக்கிறோம்.

◆◆◆ — அறம்

# அஞ்சலக அன்னநடை

வடநாட்டில் ஒரு கடிதம் வெள்ளி விழா கொண்டாடியதை சுட்டிக்காட்டி, 'அஞ்சலக அன்ன நடை' என்று ஒரு பத்திரிகை வர்ணித்தும், இதழ் குறிப்பிட்ட தேதியில் சேராமல், கிடைக்காமல் (திருடப்படுவதை) ('சுட்டி' உள்பட) பல இதழ்கள் குற்றம் சாட்டியும் அஞ்சலகத்தின் "பணி" மாற்றம் இல்லாமல் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. கடிதம் அனுப்பிய தற்கு அத்தாட்சி இல்லை என் ற ஒரே காரணத்திற்காக 'கடிதம் கிடைக்கவில்லை' என்பதை கேட்க முடியவில்லை. எப்படிப் பட்ட அவசரமான கடிதமாயிருப்பினும் தனக்கு வசதி ஏற்படும் போதே தன் 'பணி'யை அஞ்சல்துறை செய்கிறதா? என எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

'சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்' 'லோன்' பெற அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் அதற்கான அந்த அலுவலகத்திலிருந்து "நேர்முக பேட்டி"க்காக அனுப்பப் பட்ட கடிதம் 26.3.84 அன்று 12.30 மணிக்கு கிடைத்தது. நேர்முக பேட்டிக்கு செல்ல வேண்டிய நாள் 26.3.84 (கடிதம் வந்த அன்றே) 2 மணிக்கு. குறுகிய நேரத்திற்குள் தொலைவில் உள்ள அந்த (நேர்முக பேட்டிக்கு) அலுவலகத்திற்கு செல்ல முடியாமலே போய்விட்டது. ●●●

என்று தீரும் இந்த பிரச்சினை? — மறுமலர்ச்சிப்பித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

● தபால்—தந்தி துறையின் ஒரு கிளைத்துறை – முன்பு இறந்த கடிதங்களின் துறை என்றழைக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பல காரணங்களினால் பெறுனரிடத்துப் போய்ச் சேராத தபால் பொருட்கள் அதிகமானதால் இதற்கென்று தனித்துறையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

1790—ல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட இது இந்தியாவில் 100 வருடங்களுக்கு முன்பு கல்கத்தாவில் நிறுவப்பட்டது.

இதன் நோக்கம் (1) விசாரித்தல் (2) விநியோகித்தல்

தமிழ்நாடு முழுவதற்கும் பொறுப்பாக இதன் கிளையொன்று சென்னையில் இயங்கி வருகின்றது. இவ்வலுவலகத்தில் 103 பேர் பணி புரிகின்றனர். இங்கு தினசரி சராசரியாக 11,000 தபால் பொருட்கள் வந்து சேர்கின்றன.

# செத்துப்போகும் கடிதங்கள்

முதலில் இவைகளை மொழிவாரியாகப் பிரிக்கின்றனர். இந்திய மொழி அனைத்திற்கும் தனித்தனியாக அலுவலர்கள் உண்டு. கடிதங்களைப் பிரித்துப் படித்து அக்கடிதம் எங்கு செல்ல வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க முயல்கின்றனர். இங்கு வரும் கடிதங்களில் 60% விநியோகிக்கப்பட்டு விடுகின்றன என்பது குறிப்பிடத்தக்க விஷயம். விலாசம் கண்டு பிடிக்க முடியாத கடிதங்களை மூன்று மாதங்கள் வைத்திருந்து எரித்து விடுகின்றனர்.

சில கடிதங்களிலிருந்து காசோலை, டி.டி. முதலியவைகூடக் கிடைக்கின்றன. முன்பு அந்தந்த வங்கிகளை அணுகி இவைகளின் சொந்தக்காரரைக் கண்டுபிடித்து அனுப்பி வந்தனர். இப்பொழுது வங்கிகளின் உதவி குறைந்து வருவதால் இப்பணி தடைப்பட்டுள்ளது. விநியோகிக்கப்படாத பார்சல்களை ஒரு வருட காலம் வைத்திருந்து ஏலம் விடுகின்றனர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பொது மக்களின் 'மேதாவிலாசமும்' இவர்களுக்கு தலைவலி கொடுக்கின்றது. உதாரணம் 'ஆயிரம் விளக்கு' என்பதை ஒரு அறிவாளி '1000' என்று வரைந்திருப்பார்.

சேராத கடிதங்களைப் பற்றி வரும் புகார்களைக் கவனிக்க ஒரு தனிப் பிரிவே இயங்குகிறது. இதைப் பல பொது மக்கள் அறிவதும் இல்லை. அறிந்தவர்கள் பயன்படுத்துவதும் இல்லை.


**சென்னைக்குப் பெருமை சேர்ப்பவை**

* உலகத்தின் 2-வது அழகிய கடற்கரை * ஆசியாவின் மிகப்பெரிய ரயில்பெட்டி தொழிற்சாலை * ஆசியாவின் 2-வது பெரிய படப்பிடிப்பு நிலையம். அத்துடன் இந்தியாவின் மிகச்சிறந்த போஸ்டர் அச்செழுத்து தயாரிப்பாளர்கள்—

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

சென்னையிலே [illegible] அச்செழுத்துக்கள், அச்சக உபகரணங்கள் [illegible] தொடர்பு கொள்க :- 72, [illegible] சாலை, வேப்பேரி, சென்னை-112. பேசி : 37999, 661293.



## கலைஞன் பதிப்பகத்தின் கனிதமிழ் நூல்கள்

வெற்றியே வா — 5.00
365 நாட்களும் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி? — 5.00
உள்ளத்தின் உறுதி வெற்றியின் பாதை — 5.50
விடா முயற்சி வெற்றி தரும் — 5.50
வெற்றிக்கு தடையாக இருப்பது எது? — 6.00
வெற்றிக்கு வழி தன்னம்பிக்கையே — 6.00
வெற்றி தரும் சிந்தனைகள் — 6.00
இந்திய இலக்கியம் — 10.00
நூறு ஆண்டு காங்கிரஸ் — 13.00

கலைஞன் பதிப்பகம்
10, ஹென்ஸ்மென் ரோடு,
தியாகராய நகர்,
சென்னை — 600 017.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# அடுத்த இதழில் சுட்டி — 50

**சுட்டியின் 50—வது இதழ்**
**சிறப்பு இதழாக**
**64 பக்கங்களுடன்**
**சுட்டி வடிவத்திலேயே**
**வெளிவருகிறது**
**விலை ரூ 1.00**

**50 வது இதழில்**

* "அண்ணா" — என்கிற மனிதர்
* மின்சாரத்துறை — என்ன கோளாறு?

சந்தாதாரர்களுக்கு மட்டும் விலை ஏற்றமில்லை

**சுட்டி வாசகர் ஆசிரியர் குழு சந்திப்பு**
**50 வது இதழின் வரவையொட்டி**

சுட்டி ஆசிரியர் குழு வாசகர்கள் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்துள்ளோம் — சென்னையில்! சுட்டியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு துணை நிற்கக் கூடிய வாசகர்களைச் சந்திக்கவும், விவாதிக்கவும் ஆசிரியர் குழுவும் ஆர்வம் காட்டுகிறது.

சந்திக்க விரும்பும் வாசகர்கள், 15—3-85 க்குள் சுட்டி முகவரிக்கு கடிதம் எழுதுக. சந்திக்கும் நேரம், இடம் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும்.

முற்போக்கு இதழ்களுடன் — சுட்டி சந்திப்பு:

சுட்டியுடன் தோழமை கொண்டுள்ள, கொள்ள விரும்புகின்ற அத்தனை முற்போக்கு இதழ்களை — 50வது இதழ் வெளியீட்டு நாளாகிய 31-3—'85 அன்று சந்தித்து அளவளாவ ஆசிரியர் குழு விரும்புகிறது. இது தொடர்பாக 10—3—'85 க்குள் தகவல் வராத, இதழாளர்கள், விடுபட்டவர்கள் இருப்பின் அவசியம் தொடர்பு கொள்க.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அனைவரும் வருக!

வாலியின் "பெரிய புள்ளிகள்"
பாலகுமாரனின் "விட்டில் பூச்சிகள்"
அநுராதா ரமணனின் "சிறை"

புதிதாய் மூன்று
புத்தகக் கதிர்கள்
பூமியைத் தொடுகின்றன

அமைச்சர்கள்
தமிழ் அறிஞர்கள்
திரைப்படக் கலைஞர்கள்
கலந்து கொள்கின்றனர்

09.03.85 — சனிக்கிழமை — மாலை 6 மணி அண்ணாசாலை மத்திய நூலகக் கட்டிடம் (எல்.எல்.ஏ. பில்டிங்), சென்னை.
(வெளியீட்டு விழா அரங்கில் குறைந்த விலையில் நூல்கள் கிடைக்கும்)

# கனிமுத்துப் பதிப்பகம்

அம்பாள் பில்டிங், 727 அண்ணா சாலை, சென்னை — 6.
(ஆனந்த் தியேட்டர் அருகில்)

# புற்றுநோய் கேள்வி — பதில்

* புற்று நோய் வந்தவர்களை முத்தமிட்டால் அந்நோய் தொற்றுமா?

புற்று நோய் தொற்று நோய் அல்ல. அவர்களை முத்தமிடலாம். அவர்கள் வேண்டுவது அத்தகைய அரவணைப்பும் அன்பும் ஆதரவுமே.

* வாயில் வரும் புற்று நோயைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

கூரான பற்கள் இருந்தால் பல் மருத்துவரிடம் சென்று சரி செய்து கொள்ளுங்கள். புகையிலை போடுவதை முற்றிலும் தவிர்க்க. அத்துடன் பீடி, சிகரெட் புகையினால் புற்று நோய் வரும் வாய்ப்பு அதிகமாகின்றது. புகைப் பழக்கத்தால் உதட்டிலும் வாயிலும் வெள்ளை புள்ளிகள் காணப்பட்டால், உடனடியாக மருத்துவரை நாடுங்கள்.

* இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் புற்று நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடுவதில்லையா?

வெள்ளை இரத்த அணுக்கள் ஏதாவது நோய்க்கிருமி உடம்பினுள் புகுவதைக் கண்டு விட்டால், போராட்டம் தொடங்கி விடுகின்றன. இருமல், ஜுரம் எல்லாம் அந்தப் போராட்டத்தின் விளைவுகளே. புற்று நோய்க்கிருமிகளின் வளர்ச்சி மிக விரைவானது. வேறு எல்லாக்கிருமிகளையும் கினிப் பன்றி, குரங்கு, எலி போன்ற விலங்குகளிடம் சோதனை செய்து அதை அப்படியே மனிதனிடம் செய்து வெற்றி காண முடிகிறது. ஆனால் மனித உடலில் புற்று நோய்க்கிருமிகள் முற்றிலும் மாறுபட்டிருப்பதனால் சரியான மருந்தைக் கண்டு பிடிப்பதும் இயலாமல் விட்டது. வெள்ளை இரத்த அணுக்களின் எதிர்ப்பைப் புற்று நோய்க்கிருமிகள் சற்றும் இலட்சியம் செய்வதே இல்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,

* மருத்துவரிடம் போகாமலே புற்று நோய் இருப்பதை அறிய முடியுமா?

முடியும். கீழ்வரும் புற்று நோய்க் குறிகளை நன்கு மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

(1) ஆறாத புண் உடம்பில் இருந்தால்

(2) மார்பிலோ மற்ற இடங்களிலோ தசை தடிப்பாகி நின்று விட்டிருந்தால்

(3) உடம்பிலுள்ள மச்சம், மறு முதலியவற்றின் அளவிலும் வடிவத்திலும் ஏதேனும் மாற்றம் இருந்தால்

(4) தொண்டையில் விழுங்க முடியாமல் அடைப்பது போல இருந்தால்

(5) தொடர்ந்து அஜீரணமாக இருந்தால்

(6) இடைவிடாத தொண்டை வறட்சியும் இருமலும் இருந்தால் இந்த நிலையில் மருத்துவரை அணுகவும்.

---

<u>கடிதங்கள் தாமதமாக காரணம் என்னவென்று அஞ்சல் துறையில் பணிப்புரிவோரை விசாரித்தபோது அவர்கள் சொன்ன காரணங்கள்:-</u>

'ஓவர் டைம்'க்கு பதிலாக 'சிக்கனம்' என்ற பெயரில் குறைந்த கூலிக்கு பயிற்சியில்லாதவர்களை அஞ்சல்துறை பயன்படுத்தியது. அதனால் எந்த ஊருக்கு எந்த ஊர் மூலமாக அஞ்சல் (பிரித்து) அனுப்ப வேண்டும் என்று தெரியாமல் செயல்பட்டதால் உரிய நேரத்தில் கடிதங்கள் சேராமல் இருந்திருக்கலாம். இது போன்று இரண்டு மாதங்களுக்கு முன்பு வரையே! இப்போது அப்படியில்லையென்றாலும் 'ஓவர் டைம்'க்கு பயன்படுத்தப்படும் ஊழியர்களுக்கு நிரந்தரமாக்கப் பட்ட ஊழியர்களை போல் இல்லாமல் குறைந்த கூலி (அதுவும் இருந்தால், வேலை இல்லையெனில் வீட்டிற்கு சென்று விட வேண்டிய நிலையில்) கொடுப்பதால் ஊக்கம் குறைவாக செயல்படுவதும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

— இலைக்குயில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# 7 தூக்கு மேடையில் தோழன் பகத்சிங்

'ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுச் சங்கத்தின்' ஆயுள் மிகக் குறைவு தான் என்றாலும், இந்தச் சங்கம், தன் குறுகிய ஆயுட் காலத்தில், கொடியவர்கள் சிலரின் ஆயுளை முடித்திருக்கிறது!

ஆயுதப் புரட்சி பற்றிய முழுமையான தெளிவும் அதன் அவசியம் பற்றிய உணர்வும், இந்த சங்கத்திற்கும் இதன் உறுப்பினர்களுக்கும் எவ்வளவு தூரம் இருந்தது என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கு உரிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை! ஆனாலும், ஆயுதப் புரட்சியை இந்தச் சங்கம் திட்டமிட்டு நடத்தியது என்பது வரலாற்று உண்மை. இந்தச் சங்கம் தோன்றியதற்கு முன்பும், நம் விடுதலை வீரர்கள், ஆயுதங்களால் எதிரிகளைத் தாக்கியுள்ள போதிலும், அவையெல்லாம் தனி மனிதக் கோபங்கள். ஒரு சங்கத்தின் சார்பாக, ஒரு கொலை நடந்தது. இந்தக் கால கட்டத்திலே தான்!

"சைமன் குழுவே திரும்பிப் போ" என்று கோஷமெழுப்பிக் கொண்டு, லாலா லஜபதி ராய், மதன் மோகன் மாளவியா தலைமையில், பல்லாயிரக் கணக்கானோர், லாகூர் வீதிகளில் ஊர்வலம் போனார்கள்— 1928 அக்டோபர் 30 இல்! யாரோ ஒருவன் லஜபதி ராயிடம், ஒரு குடையைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தக் குடையில் 'சைமன் குழுவே திரும்பிப் போ' என்று எழுதியிருந்ததைப் பார்த்தவுடன், யாரோ தேசத் தொண்டன் சேர்த்த பரிசெனக் கருதி, பத்திரமாய் வைத்துக் கொண்டார் நம் பாஞ்சாலச் சிங்கம். பிறகு தான் தெரிந்தது — குறி வைத்துத் தாக்குவதற்கு ஏற்ற அடையாளமாகவே அந்தக் குடை அவரிடம் சேர்க்கப்பட்டதென்பது!

போலீஸ் அதிகாரி ஸ்காட் ஏவிவிட, உதவி அதிகாரி சாண்டர்ஸ், லஜபதி ராயை, மார்பிலும் தோளிலும் மாறி மாறி

FREE E- BOOKS , www.thamizham.net.,

அடித்தான். மயங்கி விழுந்த லாலா லஜபதி ராய், மருத்துவ மனையில் 17 நாள் போராடிய பின்னர், நவம்பர் 17 ஆம் நாள் இறந்து போனார்.

"இந்த தேசத்தின் வீர இளைஞர்கள் எல்லோருமே வீழ்ந்து போனார்களா? சுத்தமான இந்திய ரத்தம் ஓடுகிறது என்பது உண்மையானால், இந்தக் காட்டுமிராண்டித் தனத்துக்கு ஏற்ற பதிலை இளைஞர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். வெறும் பேச்சால் அல்ல; வெடித்துச் சிதறும் வீரச் செயல்களால்..." என்று சித்தரஞ்சன் தாஸின் மனைவி வசந்தி தேவியார் அறிக்கை விட்டார்கள்.

அந்த அறிக்கை, பகத்சிங் முதலான, அத்தனை உறுப்பினர்களையும் ஆட்டுவிக்க, ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசு சங்க உறுப்பினர்கள், மேல் நடவடிக்கைக்காக ஒன்று கூடினர்.

—— சு.ப. வீரபாண்டியன்

(தொடரும்)


## சு. சமுத்திரத்தின்
## சமுகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9.00 |

**மணிவாசகர் நூலகம்**
புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன் : 512996


FREE E- BOOKS , www.thamizham.net.,

நமது சமுதாயத்தில் திருமணங்கள் தவறான அடிப்படைகளில் நிச்சயிக்கப்படுவதால் அகவாழ்வு சிறப்பாக அமையவில்லை. இந்நிலையில் மாறுதல் தேவை என்பதை விளங்குவதற்காக இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் உட்பொருளை விளக்கும் 19 பக்க முன்னுரை நாடகத்திற்கு விளக்கவுரை போன்று அமைந்துள்ளது.

முன்னுரையில் கருத்தைக் கவர்ந்த சில பகுதிகள்

நமது சமுதாயத்தில் அக வாழ்வு மாளிகை கீழ்க்கண்ட ஐந்து கற்களின் மேல் கட்டப்படுகிறது.

(1) மதம் — ஜாதி (2) ஜாதகம் (3) உறவு (4) பணம் — பட்டம் — பதவி (5) அழகு.

இன்றைய மாறுபட்ட வளர்ச்சிச் சூழ்நிலையில் பழைய தகுதிகளைக் கொண்டு மணமக்களைத் தேர்ந்தெடுப்பது அறிவுக்குப் பொருந்தாதது, காலத்திற்கு ஒவ்வாதது, துன்பத்தை மட்டுமே விளைவிக்கக் கூடியது. மதம், ஜாதி மனத்தளவில் பொதுமையை உண்டு பண்ணாது. சாதகம் ஏமாற்று வித்தை. பணம், பட்டம், பதவி, அழகு, உறவு அனைத்தும் மனமொத்த மணமக்களைத் தேர்ந்தெடுக்கலாயக் கற்றவை. அவை ஆடம்பரப் பொருட்களாக மட்டுமே அமைய முடியும். மகிழ்ச்சியான வாழ்க்கையின் அவசியங்களாக இருக்க முடியாது.




கலகலத்த

கடைக்கால்

நாடகம் ரூ.5—50


(138 + 22 = 160 பக்கங்கள்)

டாக்டர். கோரா எம்.ஏ., எம்.லிட். பி.எச்.டி.

வெளியீடு: சிவகாமி பதிப்பகம்

அண்ணாமலை நகர்

பின் — 608 101

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஒரு திருமணம் வெற்றி பெற (1) உடல் உறவு (2) பிள்ளைப் பேறு (3) பொருளாதாரப் பயன் அல்லது வேலைப் பகிர்வு (4) மனத்துணை ஆகிய நான்கு குறிக் கோள்களை நிறைவேற்ற வேண்டும்.

மனமொத்த தம்பதியரைத் தேர்ந்தெடுக்க (1) பெண் பார்க்கும் படலம் (2) நல்ல படித்த பெரிய குடும்பத்தில் வரனைத் தேடுதல் (3) காதல் இந்த மூன்று சாதனங்களை நாம் அரைகுறையாக கையாள முயற்சிக்கிறோம். (இந்நிலை மாற வேண்டும்).

காதல் என்பது பலருடன் வெளிப்படையாக மனம் விட்டுப் பழகி ஒருவரை அறிவுடன், உணர்ச்சி பூர்வமாகத் தேர்ந்தெடுப்பதுதான். இதில் கால் பட்டால் குற்றம், கண் பட்டால் குற்றம். காதல் என்பது ஒரு கொடியில் ஒரே முறை மட்டுமே பூக்கும் ஒரே மலர் என்ற பம்மாத்துக்கு வழி இல்லை. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பால் உணர்வுடன் தான் பழக முடியும் என்ற கருத்து கேலிக்குரியதாக ஆக்கப்பட வேண்டும்.

பெண் மாப்பிள்ளை பார்க்கும் படலத்தில் கொஞ்சம் மாறுதலை ஏற்படுத்தி ஒரு சில முறைகளாவது மண வினைக்கு முன்னர் மணமக்கள் கலந்து பேசி முடிவெடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். இது மேல் போக்கான மனோதத்துவ முரண்பாடுகளை தவிர்க்க வழி வகுக்கும்.

எந்த மனித உறவிலும் விட்டுக் கொடுத்தல் என்பதும் ஒத்துப் போதல் என்பதும் இல்லாமல் அந்த உறவு நீடித்து நிலைத்துப் பயன் அளிக்காது. ஆனால் பெரும் பகுதி ஒரு பக்கத்திலிருந்தே விட்டுக் கொடுத்து வாழ்வது உப்பு சப்பற்ற பிண வாழ்வு ஆகும்.

உணர்ச்சி கருத்துப் பூர்வ முரண்பட்ட வாழ்வு நரகமாகும். முரண்பாடு, போட்டி, பொறாமை, குரோதம், பகைமை நிறைந்த அகவாழ்வு மன வளமிக்க குழந்தைகளை உற்பத்தி செய்து விடாது. விரக்திக் கும்பலையும், சேடிஸ்டு தற்றவாளி களையுமே பெற்றுப் போடும். நாம் என்ன தான் மறைத்துக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

கொண்டு வாழ்ந்தாலும் நம்முடைய போட்டி, பொறாமை, பகைமை சூழ்ந்த அக வாழ்வு குழந்தைகள் வளரும் சூழ்நிலையை விஷமாக்கிவிடும்.

மொத்தத்தில் முரண்பட்ட அக வாழ்வுக் கும்பல் சமுதாயத்தின் கூட்டு நிம்மதியையும், ஆக்க சக்தியையும் குலைக்கும். பிற்போக்கு கும்பலும், செக்குமாட்டு கும்பலுமாகச் சமூகம் நிறைந்துவழியும்.

நம் சமுதாயம் மரணத்தையும் (விவாகரத்து) மறுமணத்தையும் பாவமாக்கி வைத்திருக்கிறது. இந்நிலையில் மற்றவர்களை விட நாம் தான் கருத்து ஒருமித்த அன்புள்ளங்களை ஒன்று சேர்ப்பதில் மிகுந்த கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஆனால் இதில் நாம் தான் அதிக அலட்சியமும், அசிரத்தையும் காட்டி வருகிறோம். ஆகவே இரண்டு பக்கங்களில் இருந்தும் நமது அகவாழ்வு நெருக்கி நசுக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் எப்படியாவது வாழ்ந்து செத்தால் சரிதான் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்

●●●

## எங்கள் கண்ணீர் அஞ்சலி

கட்டியின் தொடக்க இதழ்கள் முதல் கட்டியின் ஆதரவாளரும் வாசகரும் விளம்பரதாரரும் ஆக விளங்கிய எங்கள் தோழர் திரு. மணி — பங்குதாரர் ரங்கா டைப் பௌண்ட்ரி — அவர்களைக் காலன் 32—வயதிலேயே கைப்பற்றிச் சென்ற கொடுமையறிந்து கலங்கி நிற்கிறோம். கட்டிக்குத் தோள் கொடுத்த ஓர் அன்புள்ளத்தை இழந்த எங்கள் தவிப்போடு, அவரது துணைவியார், குழந்தை, அன்பு அக்கா குடும்பத்தினரோடு அவர்கள் துயரத்தைப் பகிர்ந்து கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு

FREE E- BOOKS , www.thamizham.net.,



**காது கேட்கச் செய்வது எமது பணி**

வெளியே தெரியாமல் அணிந்து கொள்ளக்கூடிய ஆர்பி (ARPHI) ஹியரிங் எய்டுகள் மூலம் உங்களுக்கு காதுகள் கேட்கச் செய்ய எங்களால் முடியும். எல்லாவித ஹியரிங் எய்டுகளுக்கும் நாங்கள் 'சர்வீஸ்' செய்து தருகிறோம். விற்பனையும், சர்வீஸும் உத்திரவாதமானவை

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
கோடம்பாக்கம் ஓவர்பிரிட்ஜ் ஜங்ஷன்
தி.நகர், சென்னை-600 017
போன் : 440361


## அஞ்சல் துறை

அன்புள்ள துறை!...
எங்கள் அஞ்சல்
துறை.
எட்டாண்டுக்கு முன்
இறந்து போனவன்
பாட்டியை எழுப்பி
இம்மாதம்
'கருமாதி' கொடுக்
கிறது.
அன்புள்ள துறை,
எங்கள் அஞ்சல்
துறை

— இளைய மகன்


## எந்த ஐயத்திற்கும் பதில் - 2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

*✳ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக*
*✳ "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?*
*✳ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?*
*✳ வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?*
*✳ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?*

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம் எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040


FREE E- BOOKS , www.thamizham.net.,

SALES REPRESENTATIVE - தேவை. நல்ல சம்பளமும், கவர்ச்சிகரமான கமிஷனும் உண்டு. விற்பனைத் துறையில் மிகத் திறமையும், ஆர்வமும் உள்ள நபர்கள் மட்டும் 10-3-85 காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

SRI BHARATH MARKETING CORPORATION,
13-வது மெயின் ரோடு, (திருமங்கலம் அருகில்) அண்ணாநகர் (WEST) சென்னை-40.

அஞ்சல் துறையில் நடந்த முக்கிய வேலை நிறுத்தங்கள்:

1880—ல் தபால்காரர்கள் மட்டும் 21 நாட்கள் தொடர்ந்து பூனா நகரில் நடத்தினர்.

1920—ல் தபால்காரர்கள் மட்டும் 40 நாட்கள் பம்பாயில் வேலை நிறுத்தம் செய்தனர்.

1946—ல் 26 நாட்கள் வேலை நிறுத்தம்.

1984—ல் செப்டம்பர் 19—ந் தேதி ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர்.

30.12.80—ம் தேதியன்று ஒரு நிறுவனத்திற்கு மட்டும் 84,615 பதிவு அஞ்சல்கள் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. ஒரே விலாசதாருக்கு ஒரே அஞ்சலத்திலிருந்து இவ்வளவு பதிவு அஞ்சல்கள் பட்டுவாடாவானது இந்திய தபால் துறை வரலாற்றிலேயே கிடையாது. அந்த தபால் அலுவலகம் சென்னை அண்ணாசாலை தலைமை அலுவலகம்.

பதிவு தபால்கள் பெற்ற நிறுவனம் "பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலகம்"

பா.பி. இளங்கோ

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச் செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி:—

மைதிலி மோகன்,
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அஞ்சல் துறை

- சுதந்திரப் போராட்டத் தீ, சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த நேரத்தில், ஆங்கில அரசாங்கம், ஈ. டி. ஊழியர் என்னும் இப் பிரிவை உண்டாக்கி, இவர்களைக் கிராமங்களில் மக்களின் உணர்வுகளை உளவுபார்க்க பல ஊர்களுக்கும் அனுப்பிவைத்தது வெள்ளையர்களை விரட்டி விட்டதாய் முழக்கமிடும் நாம், வெள்ளையன் தோற்றுவித்த இவ்வடிமைத்தனத்தை இன்னும் விரட்டவில்லை!

- விரட்டாததோடு மட்டுமின்றி, இவர்களின் எண்ணிக்கையைச் சுதந்திர இந்தியா கூட்டிக்கொண்டுமிருக்கிறது. 1882ஆம் ஆண்டு 338 பேர் மட்டுமே ஈ. டி. ஊழியர்களாக இருக்க இன்று மூன்று இலட்சத்தைத் தாண்டிவிட்டனர்.

- **இவர்களுக்கு ஆண்டு தோறும் ஊதிய உயர்வு (Increment) கிடையாது. மருத்துவ வசதிகள் கிடையாது பிராவிடெண்ட் பண்டு (P. F.) முதலானவைகளும் கிடையாது!**

- எல்லாவற்றையும்விடக் கொடுமை - இவர்களுக்கு விடுமுறையே கிடையாது. இவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் வீதிகளில் ஊர்வலம் போனபோது, "ஆத்தா செத்தாலும் லீவு கிடையாது, அப்பன் செத்தாலும் லீவு கிடையாது" என்று முழக்கமிட்டது, வேதனையின் வெளிப்பாடு.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# E.D. ஊழியர்கள்

நன்றி: தோழமைப் புறாக்கள்

- 'இவர்களின் மாத ஊதியம் ஏறத்தாழ ரூ 150/- மட்டுமே! (சாதாரணக் கூலி வேலை பார்த்தால்கூட, இதனைவிட மிகுதியாய்ச் சம்பாதிக்கலாம்) **அரசாங்கக்கணக்குகளின்படியே ஒரு சிறைக் கைதிக்குக்கூட மாதம் 200 ரூபாய்க்குமேல் செலவழிக்கும் அரசாங்கம். தன் ஊழியனுக்கு அதனைவிடக் குறைவாக ஊதியம் கொடுத்து, இந்த நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தைக் கேவலப்படுத்துகிறது**

- ஒரு நாளைக்கு ஏறத்தாழ 16 கிலோ மீட்டர் சுற்றி வந்து கிராமங்களில் தபால்களைப் பட்டுவாடா செய்யும் ஒரு ஈ.டி. ஊழியருக்கு, அரசாங்கம், சைக்கிளுக்கான மாத வாடகைக்காக ரூ 8/- கொடுக்கிறது. (அடேயப்பா...! எவ்வளவு பெரிய தொகை!!) ஒற்றையடிப் பாதைகளிலும், காடு-மேடுகளிலும் சைக்கிளில் சென்று வரும் இவர்களுக்கு 'இந்தப் பெரிய தொகை' பஞ்சர் ஒட்டக்கூடப்போதுமானதோ என்னவோ...

- பொதுமக்களே! இது வெறும் அஞ்சல் துறை ஊழியர்களின் பிரச்சனையில்லை! தினந்தோறும் நமக்குத் தபால் கொண்டுவரும் சகோதரர்களின் பிரச்சனை! அஞ்சலகத்தில் ஈ.டி. ஊழியர்களாகப் பணியாற்றும் உங்கள் உறவினர்களின் பிரச்சனை! உழைத்து உழைத்து உருக்குலையும் நம் வர்க்கத்தின் பிரச்சனை - நம் பிரச்சனை !!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுட்டி சந்தா

12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டுச் சந்தா ரூ 7.00 பண விடை செய்யுங்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்

"சுட்டி" 1494, அண்ணாநகர், சென்னை — 600 040.

---

**சுட்டி முன் இதழ்கள் தேவையா?**

இதழ் எண்கள் 1 முதல் 17, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை அல்லது பண விடை அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

---

**சுட்டி பற்றி அறியாதோர்க்கு இலவச சுட்டி**

சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக்கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

---

"சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை" என்று சில சந்தாதாரர்கள் தாங்களே மௌனமாகக் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுட்டி தொடங்கியதிலிருந்து ஓரிதழும் நிற்கவில்லை. தாமதமானதில்லை. சந்தாதாரர்களுக்கு அனுப்பத் தவறியதில்லை. அஞ்சலில் அனுப்பப்படும் சுட்டி இதழ்கள் சில என்ன முயற்சி எடுத்தும் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. வாசகர்களுக்கு மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறோம். சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள், சந்தா எண் குறிப்பிட்டு (பெயர், முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

---

'வாசகர் எதிரொலி'களுக்கு நன்றி! பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

FREE E- BOOKS ,www.thamizham.net.,

## ஏடக்கு வந்தவை

**100 ஆண்டு காங்கிரஸ் (13.00)** — திலீபன்

**அலைகள் ஓயக் காத்திருந்தாள் (11.00)** — ஜோதிர்லதா கிரிஜா
கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை — 17.

**பெரியார் ஒரு நடைச்சித்திரம் (11.00)** — மயிலை நாதன். மயிலவன் பதிப்பகம், 7. எம்.கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.

**பாரதியின் போர்க்குரல் (7.50)** — ம.பொ.சி, பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.

**தீவுகளாகும் உறவுகள் (8.00)** பதிப்பாசிரியர் — இனியவன், வாசுகி நூலகம், விநாயக நல்லூர், வேடந்தாங்கல், (அஞ்), செங்கை மாவட்டம் — 603 314.


**வள்ளலார் அருளுரை**
சிறப்பாசிரியர்: கிருஷ்ணமூர்த்தி, 21, தீட்டித் தோட்டம் 3வது தெரு, பெரம்பூர், சென்னை 600 011. இரண்டு ஆண்டு சந்தா ரூ.10/—

**வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம் (7.00)** — அழ. வள்ளியப்பா, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை — 600 001.

**பொதுமைப் புகழ்** — ம. இராஜநாகம், பூவழகி வெளியீடு, 7, அழகம்மாள் தெரு, பழைய வண்ணையம்பதி, சென்னை — 600 021. விலை — குறிப்பிடவில்லை.

**கோலங்கள் பலவிதம் (2.25)**
**தமிழ் இங்கிலீஷ் போதினி (16.00)**
வாணி புக் டிப்போ, த.பெ. 239, 44, மலையப் பெருமாள் தெரு, சென்னை — 600 001.

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயணபாரதி. வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன். 1494 அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: ஜே. எஸ். கிட்ராஜ் ஷா, திருஷா பிரிண்டர்ஸ், 96, சாமிநாத நி, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை – 2.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

கட்டு: மாத இதழ் 1: மார்ச் 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WP .[illegible]

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to\45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS, www.thamizham.net.,